IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.29/2022
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி கார்த்திகேயன் த.பெ.அழகர்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 07.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. பி.வா.சா.ஆ3 ல் 7ம் நபருக்கு மாமியாருமான பூச்சம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்ததும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் பூச்சம்மாள் பெயரில் இதற்கு முன்பு கணவர் பெயரோ, தகப்பனார் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றால் தெரியாது. சின்னமநாயக்கர் என்பவரின் புதல்வர் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் மகனா அல்லது மருமகனா என்றால் தெரியாது. நான் பூச்சம்மாளின் உறவுமுறையைப்பற்றி கேட்டுக்கொள்ளவில்லை என்றால் தெரியாது.

2. ஜெயராமன், ஆறுமுகம் என்பவர்கள் பூச்சம்மாளுக்கு என்ன உறவுமுறை என்று தெரியாது என்றால் சரிதான். அழகர்நாயக்கர் மகன்கள் ஆறுமுகம், பால்ராஜ் பூச்சம்மாளுக்கு என்ன உறவுமுறை என்பது பற்றி தெரியாது என்றால் சரிதான். சீனிநாயக்கர் மகன் தொத்தன் என்பவர் பூச்சம்மாளுக்கு என்ன உறவுமுறை என்பது தெரியாது என்றால் சரிதான். பாண்டியநாயக்கன் மனைவி செல்லம்மாள் என்பவர் பூச்சம்மாளுக்கு என்ன உறவுமுறை என்பது தெரியாது என்றால் சரிதான், மாமியார் என்று சொல்லிக்கொள்வார்கள்.

3. பி.வா.சா.ஆ. 3 பதிவு செய்யும் போது பூச்சம்மாளின் வாரிசு சான்று கேட்டேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் மேற்படி பி.வா.சா.ஆ 3 ல் உள்ள பூச்சம்மாளின் வாரிசு சான்றிதலோ, இறப்பு சான்றிதலோ தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதலோ, வாரிசு சான்றிதலோ என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண். 60/7, 60/8 என்ற இரண்டு சர்வே எண்கள் பி.வா.சா.ஆ 3 மூலம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

4. சர்வே எண். 60/7 என்பது 55 செண்டு என்றால் சரிதான். சர்வே எண். 60/8 என்பது 22 செண்டு என்றால் சரிதான். ஆகமொத்தம் 77 செண்டு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 பத்திரம் எழுதும்போது அடிப்படை ஆவணங்கள் எதுவும் இல்லாமல் எழுதப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 60/7 என்பது 28.5 ஏர்ஸ், சர்வே எண். 60/8 என்பது 9 ஏர்ஸ் என்றாலும் ஆகமொத்தம் 37.5 ஏர்ஸ் என்றாலும் சரிதான்.

5. நான் செண்டு கணக்கில் பதிந்த விஸ்திரணத்திற்கும், ஏர்ஸ் கணக்கில் பதிந்த விஸ்திரணத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ. 3 ன் படி நான்குமாலானது அழகர்சாமி நிலத்திற்கும் வண்டிப்பாதைக்கும் தெற்கு வாதியான குமரம்மாள் நிலம் உள்ளது என்றால் சரியல்ல. எரமநாயக்கர் புஞ்சைக்கும் மேற்கு குமரம்மாள் நிலம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ள தங்கள் கைவசம் உள்ள இடம் என்பது யாருடையது என்றால் பூச்சம்மாளின் இடம் ஆகும் என்றால் சரிதான். கிழக்கே யார் உள்ளது என்றால் எரமநாயக்கர் இடம் உள்ளது.

6. பி.வா.சா.ஆ. 3 ஐ தயாரித்தவர் குறித்து எந்த விபரமும் இல்லை என்றால் சரியல்ல, விலாசம் உள்ளது. பி.வா.சா.ஆ3 ல் சாட்சிகள் யார் என்றால் பாப்பா, முத்தம்மாள் ஆகும். மேற்படி நபர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளை யார் அழைத்து வந்தார்கள் என்றால் எனக்கு கிரையம் பதிந்து கொடுத்தவர்கள்தான் அழைத்து வந்தார்கள்.

பி.வா.சா.ஆ3 பொய்யான பத்திரம், பத்திரம் முறைப்படி எழுதவில்லை, முறைப்படி வாரிசுதாரர்களிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி பி.வா.சா.ஆ 3ல் தயாரித்தவர் குறித்து விபரம் உள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 3ல் பத்திரம் தயாரித்தவரை சாட்சியாக விசாரிக்கலாம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 3 பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எடுத்துப்பார்த்து தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். பொன்னையா நாயக்கர் என்ற பெருமாள்நாயக்கர் மனைவி பூச்சம்மாள் என்பவரிடம் வாதியின் கணவர் 15.07.2010 ல் பொது அதிகார ஆவணம் பெற்றுள்ளார் என்றால் பொய்யானது.

8. வா.சா.ஆ 2ல் 2வது புகைப்படமாக உள்ள பூச்சம்மாளை தெரியும் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ல் உள்ள பூச்சம்மாளுக்கும் பி.வா.சா.ஆ. 3 ல் உள்ள பூச்சம்மாளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்திற்கு பின்னிட்டு வா.சா.ஆ 2 2010ல் எழுதப்பட்டது என்றால் பொய்யான ஆவணமாகும். 2013 ல் வாதி குமரம்மாள் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. மேற்படி எதிர்வழக்குரையில் வா.சா.ஆ. 2 பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

9. செல்லம் மகன் வேல்முருகனை தெரியும் என்றால் சரிதான். பெருமாள் பட்டியை சேர்ந்த ராஜேந்திரனை தெரியும் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் பூச்சம்மாளுக்கு ரொக்க இரசீது கொடுத்துள்ளார்கள்

என்றால் சரியல்ல. பூச்சம்மாள் ரேகை அல்லது கையெழுத்து போடுவார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ல் பூச்சம்மாள் பெயரில் குமரம்மாள் என்பவர் பட்டா பாஸ் புத்தகத்தில் சர்வே எண். 60/7 இருப்பதை வழக்கறிஞர் மூலம் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ல் உள்ள பூச்சம்மாளுக்கும் எனக்கு எந்த சம்பந்தமில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ1 ல் பெருமாள் நாயக்கர் மனைவி பூச்சம்மாள் என்றும் சர்வே எண். 60/7 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பூச்சம்மாளுக்கும் எனக்கும் கூட்டுப்பட்டா உள்ளது மட்டும்தான் தெரியும்.

10. எனக்கு கிரையம் கொடுத்தது பொன்னையநாயக்கர் மனைவி பூச்சம்மாள் வகையறா இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 7 ல் பெ.பூச்சம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 8 ல் பெ.பூச்சம்மாள் சர்வே எண். 60/7 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பட்டா மாறுதால் சம்மந்தமாக மனுதாக்கல் செய்து மனு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி மனு சம்பந்தமாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான்.

11. பி.வா.சா.ஆ 1, 2 ல் பெ.பூச்சம்மாள் என்றும் சர்வே எண். 60/7 என்றும் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 பட்டாவிற்கு முன்பாக யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ 5ல் உள்ள புகைப்படம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ5 பட்டா பாஸ் புத்தகமானது பி.வா.சா.ஆ3 ற்கு பின்னிட்டுதான் ஏற்பட்டதா என்றால் பின்னிட்டுதான் ஏற்பட்டது. மேற்படி பி.வா.சா.ஆ 5 ஆவணமானது என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ5 எப்போது ஏற்படுத்தப்பட்டதற்கான தேதி

குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 5 ல் உள்ள பட்டா எண்.461 என்பது தவறு என்றால் சரியல்ல.

12. பி.வா.சா.ஆ 7 ல் அழகர்சாமி மகன் கார்த்திகேயன், பெருமாள்சாமி மனைவி பூச்சம்மாள் என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 7 மூலம் நான் எந்த பாத்தியமும் பெற இயலாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 9 ஆவணமானது பட்டா எண்.461க்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரே பத்திரத்தில் 2 சர்வே எண்களை எழுதுவதற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு பதிந்துகொடுத்தவர்கள் அவ்வாறுதான் எழுதிகொடுத்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பெ.பூச்சம்மாள் என்பதும் நான் கிரையம் வாங்கி பூச்சம்மாள் என்பதும் வேறு என்ற நிலையில் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பொய்யாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பி.வா.சா.ஆ 3 சட்டப்படி செல்லதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.07 09:50:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.